**தலைப்பு 247 – இலங்கை சுங்கம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 247 - இலங்கை சுங்கத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை சுங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வைப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் மற்றும் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் ஆகிய இரண்டு வைப்புக் கணக்குகள் தொடர்பான நிதி நிலைமைக் கூற்றில் 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காட்டப்பட்டிருந்த மீதிகள் ஏசீஏ 4 கூற்றின் ஆரம்ப மீதிகளுடன் இணக்கம் செய்த போது முறையே ரூபா 2,122,369 இற்கான மற்றும் ரூபா 11,264,393 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டதுடன், அதற்கான காரணத்தை இனங்காணாமல் அந்த வித்தியாசத்தை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | வித்தியாசங்களை இனங்கண்டு சரியான மற்றும் வெளிப்படைத் தன்மை உடைய கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை விமானம் மூலம் கொண்டு வரப்படும் பண்டங்கள் தொடர்பான வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 2,003,201 தொகை மிகையாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2011 முதல் 2016 வரை விமானம் மூலம் கொண்டு வரும் பண்டங்கள் தொடர்பாக வைப்புக் கணக்கில் திணைக்கள பேரேட்டில் பிழையாக பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,003,201 இற்கான மீதியை அகற்றி பேரேட்டை சமப்படுத்துவதன் மூலம் 2022 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்டு, இறுதி மீதிக்காக தனிப்பட்ட மீதிகளின் அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மீதிகளின் வித்தியாசத்தை இனங்கண்டு சரியாக கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டு பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,420,000 தொகைக்கான 06 வாகனங்கள் ரூபா 11,920,200 இற்கான பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணிகளின் பெறுமதி ரூபா 4,171,150,000 தொகையென காட்டப்பட்ட போதிலும், பொது 287 படிவத்தில் பேணிச் செல்லப்படும் சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்ட பெறுமதி காட்டப்பட்டிருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணிகளின் பெறுமதியை இணக்கம் செய்ய முடியாமல் இருந்தது. | 2018 ஆண்டின் போது வழங்கல்கள் மற்றும் சேவைப் பிரிவிலிருந்து வழங்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அடிப்படையில் காணிகளின் பெறுமதி ரூபா 4,171,150,000 என நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காணிகளின் பெறுமதி சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்ட பெறுமதியுடன் இணக்கம் செய்ய வேண்டும். |

### (இ) கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி ஏடுகளின் படி கட்டுநிதிக் கணக்கின் வழியில் பணமாக காணப்பட்ட மீதி ரூபா 196,139,682 தொகையாக காணப்பட்டதுடன், திணைக்களக் கணக்கின் படி வழியில் பண மீதி ரூபா 4,648,584,888 தொகையாக காணப்பட்டமையால் ஏடுகளின் படி ரூபா 4,452,445,206 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | திணைக்களக் கணக்குகளின் படி வழியில் பண மீதி என ரூபா 4,648,584,888 மூலம் பிரதிபளிப்பது 2022 நிதியாண்டின் போது மக்கள் வங்கிக் கணக்கிலிருந்து இலங்கை வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்ட காசு மீதி மற்றும் ஆண்டின் போது கட்டுநிதி என திறைசேரி பிரதிச் செயலாளருக்கு மாற்றப்பட்ட பணப் பெறுமதியாகும். | திறைசேரி ஏடுகளுடன் திணைக்கள ஏடுகளை இணக்கம் செய்ய வேண்டும். |

### (ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டின் போது 2277இலங்கை சுங்க உத்தியோகத்தர்களுக்காக சம்பளங்கள், வேதனங்கள், மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறை நாள் சம்பளம் மற்றும் ஊக்குவிக்குக் கொடுப்பனவு ஆக அரசாங்க ஒன்றித்த நிதியத்திலிருந்து ரூபா 2,143,225,499 தொகையும், சுங்க மேலதிக நேர கப்பல் பண்டங்கள் பரிசோதனை செய்யும் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,064,935,195 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 3,208,160,694 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த செலவுகள் தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகள் ஆகிய சேவைக்கு வந்ததை உறுதிப்படுத்துவதற்கான விரலடையாள அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சுங்கத்தின் 04 பிரிவுகளில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவேடு, மேலதிக நேர பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேடு பரிசோதனை செய்த போது வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்கள் உட்பட விடுமுறை பெற்றுக்கொள்ளாமல் அனைத்து நாட்களிலும் சேவைக்கு | சுங்கத் திணைக்களத்தின் உள்வருகை பதிவு செய்யப்படுவதற்காக பயன்படுத்துவது உள்வருகை பதிவேடு ஆகும். சுங்க பதவியணியினர் 08 மணித்தியாள சேவை முறை மாற்றம் ஒன்றிற்கு வரையறுக்கப்படாமல் கடமைகளில் ஈடுபடுவதனால் விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பாக நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக அறிவுரைகள் பெறுவதற்காக பொது நிருவாக உள்நாட்டு விவகார மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கோரப்பட்டுள்ளது. | கடமைக்கு வருதலை பதிவு செய்தல் தொடர்பாக சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

வந்திருந்தார்கள். இந்த ஊழியர்கள் ஒரு நாளைக்கு 24 மணித்தியாளங்கள் வரை மேலதிக நேர படியும் பெற்றுக்கொள்வதுடன், உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலை முறையாக உறுதிப்படுத்தாமல் மேற்கூறிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவதானிக்கப்படுகின்றது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

சுங்கப் பணிப்பாளர் நாயகம் வருமானக் குறியீடுகள் 13 தொடர்பாக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவர் என்ற வகையில் செயற்பட்டிருந்தார். அந்த வருமான குறியீடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டின் படி வருமானம்** | | |
| (i) | வருமானக் குறியீடுகள் 12 இற்குரிய ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டுக்கிடையே 8 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சில் பற்றாக்குறையான முரண் ஒன்று காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | மதிப்பீடு புத்திசாலித்தனமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | ஏசிஏ – 1 (ii) பதிவேட்டுக்கு இணங்க ஆரம்ப வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீட்டிற்கிடையே காணப்படும் வித்தியாசம் சதவீதமாக காட்டும் போது அந்த வித்தியாசம் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதம் என கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வருமானக் குறியீடுகள் 12 இல் அதற்குப் பதிலாக திருத்திய வருமான மதிப்பீடு ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதம் என கணிக்கப்பட்டு காணப்பட்டததுடன், இதன் காரணமாக நிறுவனத்தினால் வித்தியாசத்திற்கான காரணம் என சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | சதவீதம் தயாரிக்கும் போது சரியாக அறிவுரைகளை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | | |
| **(ஆ)** | **திருத்திய மதிப்பீடு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம்**<br>3 வருமானத் தலைப்புக்களில் மீளாய்வாண்டின் திருத்திய மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கிடையே 5 சதவீதம் முதல் 19 சதவீதம் வரையான வீச்சில் பற்றாக்குறை முரண் ஒன்று ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | மதிப்பீடுகள் புத்திசாலித்தனமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **முன்னைய ஆண்டின் வருமானத்துடன் இணக்கம் செய்தல்** | | |
| | மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் முன்னைய ஆண்டின் வருமானத்துடன் இணக்கம் செய்யும் போது 07 வருமானக் குறியீடுகள் தொடர்பாக வருமானத்தில் கணிசமான குறைவொன்று காணப்பட்டதுடன், அது 4 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையான வீச்சை கொண்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | வருமானத்தை அதிகரிக்கக் கூடிய செய்முறைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| **(ஈ)** | **நிலுவை வரி வருமானம்** | | |
| (i) | 2022 சனவரி 01 திகதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 23,230,293,071 தொகை எனப்படும் 38 சதவீதத்தை பிரதிபளிப்பது, இறக்குமதி நிலுவை வரியாகும். அவற்றில் ரூபா 22,714,244,813 தொகை 2019 ஆண்டிற்கும் முன்னர் இருந்து காணப்படும் நிலுவை வருமானம் ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 16,076,072,367 தொகை எனப்படும் 26 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்துவது விஷேட வர்த்தக பண்டங்களின் வரிகளினால் ஆகும். அவற்றில் ரூபா 16,064,240,567 தொகை 2019 ஆண்டு மற்றும் அதற்கு | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படும் நிலுவை வருமானம் ஆகும். | | |
| (iii) | 2022 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 10,476,732,912 தொகை அதாவது 17 சதவீதம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரியாக காணப்பட்டதுடன், அவற்றிலும் ரூபா 10,247,074,664 தொகை அதாவது 98 சதவீதம் 2019 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படும் நிலுவை வருமானம் ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | - மேற்படி - |
| (iv) | 2022 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு மொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 6,137,991,353 தொகை எனப்படும் 10 சதவீதத்தை சித்தரித்துக் காட்டுவது இறக்குமதி செஸ் வரி ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 6,135,212,781 தொகை 2019 ஆண்டு வரை காணப்பட்ட நிலுவை வருமானம் ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 2022 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு காணப்பட்ட ரூபா 61,999,994,128 இற்கான ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் மீளாய்வாண்டின் போது ரூபா 5,767,519,628 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த தொகை ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தின் 09 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படும் ரூபா 61,254,145,583 தொகையாகிய ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 39,063,403,231 தொகை அதாவது 63 சதவீதம் நிதி அமைச்சிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தில் பெறுமதி ஒன்று உட்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். - மேற்படி - |

**2.2 செலவு முகாமைத்துவம்**

**2.2.1 மீண்டுவரும் செலவுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | **ஆரம்ப மற்றும் திருத்திய செலவு மதிப்பீடுகள்** | | |
| | மீளாய்வாண்டின் போது 08 மீண்டுவரும் செலவு விடயங்களின் ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்கு இடையே 20 சதவீதம் முதல் 136 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன்படி ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளின் செலவுகள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு முடிந்த அளவு சரியான செலவு மதிப்பீடு எதிர்வுகூறும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | மதிப்பீடு புத்திசாலித்தனமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **ஏற்பாடுகள் சேமித்தல்** | | |
| | மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக 21 செலவு விடயங்களின் தேறிய ஏற்பாடுகளில் 06 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமித்திருத்தல் ஒன்று அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | மதிப்பீடு புத்திசாலித்தனமாக தயாரிக்கப்பட வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மின்சார சபை தொடர்பாக ரூபா 9,673,881 இற்கான பொறுப்பொன்று காணப்பட்ட போதிலும் அதனை 2022 ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | ஈடுபாட்டுப் பொறுக்கள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் அனைத்து பொறுப்புக்களும் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அல்லது பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன் 12 செலவு விடயங்கள் தொடர்பாக செலுத்தியிருந்த 2023 ஆண்டில் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மொத்த பொறுப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 22,399,020 ஆகக் காணப்பட்து. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | - மேற்படி - |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டம் | | | |
| | (i) பிரிவு 153 (2) (ஆ) | வெகுமதி நிதியத்தில் இருந்து வெகுமதித் தொகைகள் வினியோகிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கத்தை பெற்றுக் கொண்டு அதற்காக பொருத்தமான செய்முறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 1988 ஜனவரி 28 திகதிய | சுங்க திணைக்களத்தின் வெகுமதிப் பணம் வினியோகம் தொடர்பாக தற்போது திணைக்களத்தினால் 1988 ஜனவரி 28 திகதியின் 118 ஆம் இலக்க கொள்கை பதிவேட்டின் படி மற்றும் அதற்குரிய திருத்திய | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பீஎல் 118 இலக்கங் கொண்ட திணைக்கள கட்டளைக்கு நிதியமைச்சரின் இணக்கத்தினை பெற்றுக் கொண்டுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்ளாமல் 1999 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான 23 வருடங்களில் வெகுமதி நிதியம் என உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,870,564,416 தொகையும் துப்பு வழங்கியோருக்கு ரூபா 3,143,829,243 தொகையும் வினியோகிக்கப்பட்டிருந்தது. | கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்காக நிதியமைச்சரின் இணக்கம் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக கண்டறிவதற்காக மேலும் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டுகளின் போது வெளியிடப்பட்டிருந்த திணைக்களக் கட்டளைகள் மற்றும் உரிய ஆவணங்கள் பரிசோதனை செய்து அறிவிப்பதற்காக குறித்துக் கொண்டேன். | |
| (ii)பிரிவு 84 (அ) (3) | சுங்கத் தீர்வை செலுத்தப்படாத பண்டகசாலை (Manufacture in Bond – MIB) வசதிகள் பெற்றுக் கொண்டுள்ள ஏதேனும் கைத்தொழில் ஒன்று தொடர்பாக பண்டங்களை உள்நாட்டு சந்தைக்கு வழங்கும் போது இறக்குமதி என கணித்து சுங்கத் தீர்வை கணிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான 02 கம்பனிகள் இலக்கம் 1448/1 மற்றும் 2006 ஜுன் 05 திகதிய கைத்தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்பட்டிருந்த ‘‘உள்நாட்டில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியை உடைய துணைக் கருவிகளை பயன்படுத்தி இணைக்கும் வாகனங்களுக்காக வழங்கப்படும் 70 சதவீத வரிச் சலுகை’’ பெற்றுக் கொண்டு 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான ரூபா 7,191,949,084 இற்கான உற்பத்தி வரி செலுத்துவதை புறக்கணித்து இருந்தது. | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 84 (அ) (3) பிரிவின் கீழ் உற்பத்தி வரி செலுத்தும் போது இறக்குமதி ஒன்றென கணிக்க வேண்டியிருந்தமையால் அப்போது உற்பத்தி வரிச் சட்டத்தின் 5 (1) ஆ மற்றும் 5 (2) (அ), 5 (2) (ஆ) பிரிவுகளில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு பிரயோகிக்க வேண்டும். | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் தாபனக் கோவை | | | |
| (i) அத்தியாயம் XIV உப பிரிவுகள் 4.1 மற்றும் 4.4 | 2022 ஜனவரி முதல் மார்ச் வரை மேற்கொள்ளப்பட்ட உறுதிச் சீட்டுகள் பரிசோதனையின் போது குறிப்பிட்ட பிரிவுக்கு முரணாக பிரயாணத்தின் தூரம் ஏழு மைல்களுக்கு மிகையாக அல்லது எடுக்கப்பட்ட நேரம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 207 சந்தர்ப்பங்களில் ரூபா 5,378,494 தொகையொன்று மைல் வாடகை கொடுப்பனவு என பிரயாணச் செலவு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முக்கியமாக ஒருகொடவத்த உணவுக் களஞ்சிய வளாகத்தில் பேணிச் செல்லப்படும் சுங்க உப அலுவலகத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர் தொடர்பானது என அவதானிக்கின்றேன். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |
| (ii) அத்தியாயம் XXIV உப பிரிவு 4 | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு இறந்த உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த 05 வருடங்களை மிகைத்துள்ள கடன் மீதி ரூபா 59,426 தொகையும் 01 வருடம் முதல் 02 வருடங்கள் பழமை வாய்ந்த அறவீடு செய்யப்படாத கடன் மீதி ரூபா 428,842 தொகையும் ஒரு வருடத்தை விட குறைவான கடன் மீதி ரூபா 816,906 தொகையும் காணப்பட்டது. | இறந்த உத்தியோகத்தர் தொகுதியில் உட்படுத்தப்பட்டிருந்த 05 வருடங்களை மிகைத்துள்ள ஒரு உத்தியோத்தரின் கடன் மீதி ரூபா 59,426.00 தொகை ஆகும். ஓய்வு பெற்ற உத்தியோத்தர்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள் ஆவர். இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக கோவைகளை கண்டறிய முடியாமல் உள்ளதுடன் மேலும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |
| | • மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட 05 வருடங்களை மிகைத்த கடன் மீதி ரூபா 513,577 தொகையும் 03 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான கடன் மீதி ரூபா 211,273 தொகையும், 01 | | |

| | | | |
|---|---|---|---|
| | வருடம் முதல் 02 வருடம் வரையான கடன் மீதி ரூபா 444,399 தொகையும் ஒரு வருடத்தை விட குறைவான கடன் மீதி ரூபா 3,386,791 தொகையும் காணப்பட்டது.<br><br>• வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் ஒரு வருடத்துக்கு குறைவான கடன் மீதி ரூபா 591,959 தொகையும், 01 முதல் 02 வரையான பழமையான கடன்மீதி ரூபா 321,884 தொகையும் 4 முதல் 5 வருடங்கள் வரையான பழமையான கடன்மீதி ரூபா 68,800 தொகையும், 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்மீதி ரூபா 1,370,235 தொகையும் காணப்பட்டதுடன், கடமையை விட்டுச் சொன்றிருந்த உத்தியோகத்தரிடம் 01 முதல் 02 வருடங்கள் வரையான பழமையான கடன்மீதி ரூபா 309,534 தொகையும், 05 வருடங்களை மிகைத்திருந்த கடன் மீதி ரூபா 473,073 தொகையும் காணப்பட்டது. குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 102 மற்றும் 110 | வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றினால் கப்பல் ஒன்றில் இருந்து வேறொரு கப்பலுக்கு மாற்றும் முறைமை ஒன்றின் கீழ் | இலங்கை சுங்கத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் படி மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் நீதி | நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |

(Transshipment) சிங்கப்பூரில் இருந்து கப்பலில் ஏற்றப்பட்ட சிகரட் தொகையொன்று இலங்கை சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அந்த தீர்ப்பின் படி சிகரட் இருப்பு மீள் கப்பலில் ஏற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது சுங்கத்தினால் கருத்து வேறுபாடுடன் இந்த சிகரட் இருப்பை ஏல விற்பனையில் விற்பனை செய்து ரூபா 5,901,750 இற்கான தொகையொன்று உழைத்திருந்தது. எவ்வாறாயினும் இந்த விற்பனைக்கு எதிராக குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததுடன், மாவட்ட நீதிமன்றில் சுங்கம் குற்றவாளி என தீர்க்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்துக்கு எதிராக சுங்கத்தினால் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் இறக்குமதியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டத்துக்காக ரூபா 37,529,749 தொகையும், சட்டரீதியான வட்டியாக ரூபா 63,464,121 தொகையும், வழக்குக் கட்டணமாக ரூபா 190,000 தொகையும் செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. சட்டரீதியான கட்டணம் ரூபா 31,732,060 தொகை வரை குறைப்பதற்கு இறக்குமதியாளர் எனப்படும் முறைப்பாட்டாளர் தரப்பினர் இணங்கியிருந்ததுடன் அதன் படி சுங்கத்திற்கு இந்த பிழையான தீர்ப்பின் மூலம் மன்றத்தினால் விதிக்கப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்த நேரிட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 69,451,809 தொகையாக இருந்தது. இந்த விசாரணைகள் தொடர்பான கோவை காணாமல் போயிருந்தது என கணக்காய்விற்கு 2022 செப்தெம்பர் 22 திகதி சுங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் மேற்கூறிய பிழையான தீர்மானத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | 2022 ஏப்ரல் 4 ஆம் திகதிய 05/2022 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | அரச ஆதனங்கள் காணாமல் போதல் முறைகேடாக பயன்படுத்தலை தவிர்ப்பதற்காக மற்றும் அரச ஆதனங்களை உச்சமட்ட ஆக்கபூர்வ தன்மையுடன் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த வேண்டி இருந்த போதிலும் கணக்கு பிரிவில் பேணப்பட்டு வருகின்ற சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய சொத்துக்கள் பதிவேட்டின் படி 102 வாகனங்கள் காணப்பட்டதுடன், வழங்கள்கள் மற்றும் சேவைப் பிரிவினால் பேணப்பட்டு வருகின்ற வாகனங்களின் செலவு அறிக்கையின் படி 109 வாகனங்கள் காணப்பட்டது. எவ்வாறாயினும், அந்தப் பிரிவினாலே வாகனங்கள் தொடர்பாக பேணப்பட்டு வந்த 03 நிலையான சொத்துக்கள் பதிவேடுகளின் படி நிறுவனத்துக்கு சொந்தமாக 165 வாகனங்கள் காணப்பட்டது. | இலங்கை சுங்கத்துக்கு சொந்தமாக 109 வாகனங்கள் காணப்படுகின்றன. நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக காணப்படாத, அப்புறப்படுத்தல் தொடர்பாக சான்றுகள் காணப்படாத 56 வாகனங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விசாரிக்கப்பட்டு அந்தக் கோவை 2022.10.18 திகதி சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டது. | சுற்றிக்கை அறிக்கை ஏற்பாடுகளுக்கு நேரொத்தாக இருக்க வேண்டும். |

## 2.5 மிகை விதிப்பு மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்கத் திணைக்களம் உணவு ஆணையாளர் திணைக்களத்துடன், உடன்படிக்கை மேற்கொண்டு ஒருகொடவத்த 12 ஆம் இலக்க களஞ்சியத்தில் அமைந்துள்ள இடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன், அதன் மாதாந்த கொடுப்பனவு தாமதம் அடைந்ததினால் விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பு ரூபா 3,655,985 தொகை ஆகும். | இந்த மிகை விதிப்பை நி.பி.113 பிரிவின் கீழ் கைவிடுவதற்காக மற்றும் ஏடுகளில் இருந்து பதிபழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கும் படி உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு 2022.01.25 திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. | மாதாந்த கொடுப்பனவுகள் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்க தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்கு 2022 ஆண்டிற்காக பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்வதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் படி தகைமை உடைய நிறுவனங்களில் இருந்து விலைகூறல்கள் மேற்கொள்ளாமல் பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் PFD/RED/01/05/2015/3 மற்றும் 2015 மே 22 திகதிய கடிதத்திற்கு இணங்க 05 வருடத்தை விட கூடிய காலத்தை உடைய முன்யை ஆண்டுகளின் போது பாதுகாப்பு சேவை வழங்கிய நிறுவனத்தில் இருந்து மீளாய்வாண்டின் போதும் சேவையை பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்தது. அதன்படி அப் பாதுகாப்பு கம்பனிக்கு மீளாய்வாண்டின் போதும் ரூபா 27,821,760 | பாதுகாப்பு சேவை வழங்கப்பட்டிருந்த ரக்னா பாதுகாப்பு லங்கா கம்பனியினால் வழங்கப்பட்டு இருந்ததுடன் அச் சேவை வழங்கப்பட்டிருந்தது ஒரே கூறுவிலையின் கீழே ஆகும். | சேவையொன்று பெற்றுக்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல் கோவை கடைபிடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான தொகையொன்று பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க உரிய புதிய வழங்குனர்கள் தெரிவு செய்யப்படாமல் 2015 முதல் கட்டிடங்களை வாடகைக்கு கொடுத்திருந்த தரப்பினரிடம் உடன்படிக்கைகளை புதுப்பித்து நீர்கொழும்பு, ஒருகொடவத்த, மட்டக்குளி, யாழ்ப்பாணம் மற்றும் மத்தள ஆகிய பகுதிகளின் உத்தியோகத்தர்களுக்காக கட்டிடங்கள் வாடகைக்கு பெற்று மீளாய்வாண்டிற்காகவும் கூட்டுத்தொகை ரூபா 15,206,322 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2015 ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கியிருந்த தரப்பினரிடம் உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டு வாகன தரிப்பிரடங்கள், களஞ்சியங்கள் மற்றும் விடுதிக் கட்டிடங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | புதிய வழங்குனர்கள் தெரிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவை கடைபிடிக்கப்பட வேண்டும். |

### 3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இல.40 மோஹன் வீதி, கொம்பனித்தெரு, கொழும்பு 02 என்ற இடத்தில் சுங்கத்துக்கு சொந்தமான தரைப்பகுதி ஒன்றில் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 வீடுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் இன்றி வதிபவர்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் பலவருட காலமாக கடிதங்களின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேன் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் கொழும்பு பிரதேச செயலாளருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அங்காரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை திணைக்களத்தின் 40 பிரிவுகள் (Directorate) தொடர்பாக 9754 சுங்க விசாரணைகள் காணப்பட்டதுடன், அவற்றில் வருமான மேற்பார்வை அலகு (RTF) தொடர்பாக 3199 தொகையும், தடைசெய்யும் பிரிவு (Preventive) தொடர்பாக 1593 | இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத சுங்க விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணைகளும், மத்திய விசாரணை பிரிவு தொடர்பாக 738 விசாரணைகளும் ஏனைய 37 பிரிவுகள் தொடர்பாக 4224 விசாரணைகளும் காணப்பட்டன. மீளாய்வாண்டு இறுதித் திகதியளவில் ஒட்டுமொத்த விசாரணைகளின் எண்ணிக்கையில் 5 வருடங்களை விட பழமையான 3582 தொகையும் 1 மற்றும் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட 4720 தொகையும், ஒரு வருடத்திற்கு உட்பட் 1452 விசாரணைகளும் காணப்பட்டன. | | |
| (ஆ) | டன்சானியாவின் Zanzibar துறை முகத்தில் இருந்து இலங்கை துறைமுகத்தின் ஊடாக ஹொங்கொங் இற்கு மீள் ஏற்றுமதி செய்வதற்காக ஆபிரிக்க திண்ம பலகை (African Hard Wood) என குறிப்பிட்டு அழிவிற்கு நேரிட்டுள்ள மற்றும் சர்வதேச வர்தகத்தின் வரையறுக்கப்பட்டுள்ள ரோஸ் வுட் (Rose Wood) 420 மெட்ரிக் தொன் மரக் கட்டைகள் 3669 இருப்பொன்று சுங்கத்தினால் பரிமுதல் செய்து விற்பனை செய்வதற்கு பல சந்தர்ப்பங்களில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டிய CITES அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள முடியாமையினால் 2014 முதல் 2023 ஏப்ரல் 30 திகதி வரை அப்புறப்படுத்தப்படாமல் சுங்க முற்றத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது. பதப்படுத்தப்படாத குற்றிகளாக காணப்பட்டமையால் இந்த மர இருப்புக்கு தற்போது கிருமிகளினால் சேதம் விளைவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 முதல் 2022 வரை இந்த மர இருப்பினை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்காக க்ரே லயின் கென்டேனர் முற்றத்தினால் சுங்கத்திற்கு ரூபா 81,621,820 இற்கான மதிப்பீட்டு செலவொன்று தொடர்பாக அறிவித்திருந்தது. | இந்த Rose Wood மர இருப்பு 2015.08.22 தொடக்கம் இதுவரை அறுபத்தைந்து தடவைகள் (65) மாத்திரம் கேள்விக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 04 சந்தர்ப்பங்களில் மாத்திரம் கூடிய விண்ணப்பதாரிகளுக்கு அந்த மர இருப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் உரிய பணத்தை செலுத்தி சுங்கத்தில் இருந்து அந்த பண்டங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள பரிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை தாமதம் இன்றி விற்பனை செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரேசிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி கொள்களன்களில் போதைப் பொருள் இருப்பதாக இறக்குமதியாளர்களினால் அறிவிக்கப்பட்டதனால் தடுத்து வைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் போதைப் பொருட்கள் அடங்கியிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இறக்குமதியாளருக்கு சீனிக் கொள்களன்களில் 4 தொகை குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் விடுவிக்க முடியாமல் போனமையால் அந்த கொள்களன்கள் தொடர்பாக 2017 பெப்ரவரி மாதம் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 109 இன் கீழ் குறிப்பிட்ட சீனி இருப்பினை பரிமுதல் செய்து 2022 ஏப்ரல் மாதத்தில் மிருக உணவு என மீண்டும் விற்பனை செய்திருந்ததுடன் அதற்காக 5 வருடங்கள் கடந்திருந்தது. | குறிப்பிட்ட சீனி இருப்பு 2022.04.07 திகதி டெண்டர் செய்யப்பட்டுள்ளது. | விசாரணைகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பல்வேறு பிரிவுகளில் இருந்து மேற்கொள்ளப்படும் சுங்க விசாரணைகளில் சுங்க மயமாக்கப்படும், வேறு ஒரு ஒழுங்குறுத்தல் நிறுவனங்களில் இருந்து சுங்கத்துக்கு ஒப்படைக்கப்படும் மற்றும் பரிமுதல் செய்யப்படும் வாகனங்கள் மற்றும் கொள்களன்கள் ஏல விற்பனை அல்லது அப்புறப்படுத்தும் வரை சுங்கத்தின் மேற்பார்வையில் தடுத்து வைப்பதற்காக 18,000 சதுர அடி நிலப்பரப்பொன்று தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து வாடகைக்கு எடுப்பதற்காக 2015 ஆண்டின் போது உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன் அந்த முற்றத்தில் 2023 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு 435 மோட்டார் வாகனங்களும், 91 கன்டேனர்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் 261 வாகனங்கள் மற்றும் 86 கொள்களன்கள் 05 வருடங்களை விட மிகையாக காலம் முதல் அந்த | இலங்கை சுங்கத்தினால் பரிமுதல் செய்யப்படும் வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் பரிசோதனை முடியும் வரை பாதுகாப்புடன் தடுத்து வைப்பதற்காக 2015 முதல் மட்டக்குளியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான முற்றமொன்று வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், அதற்கான மாதாந்த வாடகை இலங்கை சுங்கத்தினால் செலுத்தப்படுகின்றது. | தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்கள் மற்றும் காணாமல் போன விசாரணை கோப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

தரைப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், 133 வாகனங்கள் தொடர்பாக விசாரணைக் கோப்புக்கள் காணாமல் போயிருந்தன. 2015 ஆண்டு முதல் 2020 வரையான காலப் பகுதி வரை மாத்திரம் குறிப்பிட்ட தனியார் கம்பனிகளுடன் முறையான உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்ததுடன், அதன் பின்னர் 2023 ஜனவரி வரை 5 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு செய்து அந்த தரைப் பகுதியை பயன்படுத்தியிருந்தது. 2015 ஆண்டு முதல் 2023 ஜனவரி வரை குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்கு செலுத்தியிருந்த மற்றும் செலுத்த வேண்டியிருந்த மொத்த வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 77,485,548 ஆகக் காணப்பட்டது. 5 வருடங்கள் மிகையான காலம் முதல் நிறுத்தப்பட்டிருந்த இந்த சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை தாமதமின்றி எடுக்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(உ) மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 102 மீன் கொள்கலன்கள் சுங்கத்திலிருந்து விடுவித்தல்**

சீ செல்ஸில் இருந்து தாய்லாந்து வரை டூனா மீன்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட கொள்கலன்களை தாங்கிய CMA CGM Kailas எனும் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்த கடல் பகுதியில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்ட காரணத்தினால் 20 நாட்களாக மின்சார வழங்கல் நிறுத்தப்பட்டு இருந்ததென குறிப்பிட்ட அண்மித்த துறைமுகமான இலங்கை துறைமுக அதிகார சபைக்கு அறிவித்திருந்தது. அதன்படி, விரைவான நடவடிக்கையாக மின்பிறப்பாக்கியை பயன்படுத்தி மின்சாரம் வழங்கப்பட்டு இலங்கையின் இழுவை வள்ளத்தை பயன்படுத்தி 2022 ஜனவரி 13 திகதி

இந்த சம்பவம் 2022 ஆண்டு ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட கப்பலை நாட்டினுள்ளேயே நிறுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருந்தது. குறிப்பிட்ட கப்பலில் காணப்பட்ட 102 கொள்கலன்களிலுள்ள மீன்களும் இந்த சந்தர்ப்பம் அளவில் பழுதடைந்திருந்ததெனவும், அந்த இருப்பினை மீண்டும் ஏற்றுமதியாளர் ஒப்புக்கொள்ளமாட்டார் எனவும் சுட்டிக்காட்டி மீன் இருப்பினை வெளித் தரப்பினருக்கு மிருக உணவு மற்றும் சேதனப் பசளை தயாரிப்பதற்கு சுங்கத்தினால் விடுவித்தல் தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இந்த மீன் இருப்பு அடங்கிய கப்பலின் தன்மை Transshipment Status எனினும் Import cargo status என மாற்றம் செய்து சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக HS Code வகைப்படுத்தல் குழுவிடம் முறையான அங்கீகாரம் பெற்றிருக்காததுடன் இந்த மீன் இருப்பு பழுந்தடைந்த நிலையில் காணப்படுகின்றதென அறிவித்திருந்த போதும், HS Code 511.91.10 இன் கீழ் Whole Round Tuna In Bulk என சுங்கப் பதிவுப் புத்தகத்தில் உட்படுத்தி அதன்படி, சுங்கத்தினால் ரூபா 6,288,357 வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த பண்டங்கள் வகைப்படுத்தல் இலக்கம் 0511.91.10 இன் கீழ் மீன் கழிவுப்பொருட்கள் (Fish Waste) என வகைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வகைப்படுத்தல் சரியாக இருந்தமையால் இந்த வகைப்படுத்தல் தொடர்பாக தெளிவற்ற தன்மையொன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மாத்திரம் ‘‘வகைப்படுத்தல் குழுவிற்கு’’ அனுப்புதல் மேற்கொள்ளப்படுகின்றமையால் இங்கு வகைப்படுத்தல் நிலைமைக்கு ஆக்கும் தேவைப்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை என குறிப்பிடுகின்றேன். | மீன் இருப்பு பழுதடைந்த நிலைமை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றாக காணப்பட்டமையால் வகைப்படுத்தல் தொடர்பாக தெளிவற்ற தன்மையொன்று ஏற்பட்டிருந்ததுடன், அச் சந்தர்ப்பத்தில் ‘‘வகைப்படுத்தல் குழுவொன்றிற்கு’’ சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக இறக்குமதி ஒன்று ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க வேண்டியது இந்த மீன் இருப்பினை கொள்வனவு செய்த கம்பனியாக இருந்த போதிலும் பிரதி சுங்கப் பணிப்பாளர் மத்திய அகற்றல் பிரிவு (Central Disposal Directorate) இனால் 2022 மே 22 திகதி இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமொன்று தேவை என இறக்குமதி ஏற்றுமதி | இதற்கான இறக்குமதி அனுமதிப்பத்திர இலக்கம் IM-5-550-2022-001380 இன் கீழ் Eco N Rich Organic Fertilizer இற்கு வழங்கப்பட்டிருந்தது. | சுங்க உத்தியோகத்தரினால் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் தேவை என இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்திருந்தது. | | |
| (iii) | உர உற்பத்தியாளரின் கொள்திறன் தொடர்பாக கவனம் செலுத்தாமல் பாரிய மீன் இருப்பொன்று உர உற்பத்திக்காக வழங்குவதால் போதியளவு கொள்திறனுடன் விடயங்கள் ஏற்பட்டிருக்காமை. (போதியளவு உழைப்பு மற்றும் உபகரணம் இன்மையினால்) மற்றும் சில கொள்கலன்களில் குளிரூட்டிக்கு மினசாரம் வழங்கல் தடைப்பட்டமையால் அந்த மீன் களஞ்சியங்கள் சார்ந்த சுகாதாரத்திற்கு பிரதிகூல நிலைமை ஒன்று உருவாகி அதிக துர்நாற்றம் வீசும் நிலைமையொன்று மற்றும் கொள்கலன்களிலிருந்து சிந்தும் அசுத்த திரவங்கள் காரணத்தினால் சுற்றுச் சூழல் மாசடையும் நிலைமையொன்று ஏற்பட்டிருந்ததெனவும், அந்தக் களஞ்சிய வளாகங்கள் தொடர்பாக 2022 ஆகஸ்ட் 16 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன், இதன் காரணமாக அந்தப் பிரதேச வாசிகளினால் குற்றம் சாட்டப்பட்டிருந்ததுடன், 2022 ஜுலை 07 திகதி மஹபாகே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 60 கொள்கலன்களை அப்புறப்படுத்துமாறு அறிவித்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | உர உற்பத்திக்கு தேவையான அனுமதிப்பத்திரம் உரச் செயலகத்திலிருந்து 2021.10.28 திகதி இந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பிரதிகூலமான நிலைமை ஏற்படுமா என்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (iv) | அவசர சந்தர்ப்பம் ஒன்றில் கப்பலில் ஏற்பாடும் கோளாறுகளின் போது அண்மையிலுள்ள துறைமுகத்தினால் ஏதும் வசதிகள் வழங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அ) அட்டவணையின் படி நாட்டிற்கு இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பண்டங்கள் என இந்த அட்டவணையின் (12) பிரிவின் படி பழுதடைந்த துர்நாற்றம் வீசும் | இது தொடர்பாக மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அது முடிவடைந்த பின்னர் இது தொடர்பாக பதிலனுப்ப இயலுமாகும். | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது விருப்பமில்லாத தரத்திலுள்ள அல்லது உணவிற்கு தகைமையில்லாத மற்றும் சட்டரீதியாக பயன்படுத்த தகைமை அல்லாத தொடுவதற்கு தகைமை அல்லாத அல்லது நோய்கள் ஏற்படக் கூடிய மீன் வகைகள், தானிய வகைகள் மற்றும் ஏனையவற்றின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்த போது மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மீள் ஏற்றுமதி மேற்கொள்வதற்கு உள்நாட்டு கப்பல் முகவருக்கு அறிவிக்காமல் அதற்கு முரணாக சுங்கத்தினால் இந்த தகைமை இல்லாத மீன் இருப்பை இலங்கையில் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | |
| (v) | மீன் இருப்பினை விடுவிக்கும் போது 17 குறிப்புப் பதிவுகள் ஏற்றுக்கொண்டு மேற்கூறிய நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இந்த சுங்க குறிப்புப் பதிவுகள் தயாரிப்பதற்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட Way bill, Invoice, Packing List பயன்படுத்தியிருத்தல் கணக்காய்வில் கேள்விக்குறியாய் உள்ளது. | குறிப்பிட்ட கப்பல் சரக்குப் பதிவேடு சுங்க தரவு முறைமைக்கு ஆரம்பமாக Transhipment என உட்படுத்தப்பட்டிருந்ததுடன், மத்திய அகற்றல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கோறிக்கையின் படி கப்பல் சரக்குப் பதிவுகள் Nature ஒன்று அதாவது தரம் Transhipment இருந்து Local வரை Edit செய்யப்பட்டிருந்தது. | சுங்க குறிப்புப் பதிவேடு தயாரிப்பதற்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட Way bill, Invoice, Packing List ஆகியவற்றை பயன்படுத்த முடியாது. |
| (vi) | தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளான என்று குறிப்பிடப்படும் CMA CGM KAILAS கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு நெருங்கிய திகதி 2022 ஜனவரி 13 திகதி என கப்பல் முகவர் நிறுவனத்தின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுங்க குறிப்புப் பதிவுகளில் கப்பல் துறைமுகத்திற்கு நெருங்கிய நேரம் 2022 பெப்ரவரி 08 திகதி என பதிவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கப்பல் இலங்கையின் சுங்கத்திற்கு நெருங்கிய திகதி 2022 பெப்ரவரி 09 திகதி என கப்பல் முகவர் நிறுவனத்தின் கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சுங்க குறிப்புப் பதிவுகளில் கப்பல் துறைமுகத்திற்கு நெருங்கிய உண்மையான திகதி குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | சுங்கக் கட்டளைச் சட்டத்தனி 162 ஆம் பிரிவிற்கு இணங்க மீன் இருப்பு சட்டவிரோதமானது என குறிப்பிடாமல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 12 மற்றும் 43 இற்கு இணங்க விடுவிக்க முடியாதிருந்த போதிலும் அவ்வாறான கூற்றொன்று வெளியிடாமல் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்கள கட்டளை 1450 இன் படி பரிமுதல் செய்யப்பட்ட (Forfeited), தடுத்து வைக்கப்பட்ட (Seized) அல்லது கைவிடப்பட்ட (Abandon) பண்டங்கள் விடுவித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, இந்தப் பண்டம் ‘‘கைவிடப்பட்ட பண்டம்’’ என கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமா என விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (viii) | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 34(1) இன் படி இலங்கை துறைமுகத்திற்கு சரக்குகளை இறக்குவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டாலன்றி ஏதேனும் கப்பலிலிருந்து பண்டங்கள் ஏதும் கரையிறக்கக் கூடாததுடன், கரையிறக்கப்படும் அனைத்து கொள்கலன்களுக்குமாக இலங்கை சுங்கத்தின் அங்கீகாரமும் அனுமதியும் தேவைப்பட்ட போதிலும் குறிப்பிட்ட கோவைகளை பரிசோதனை செய்த போது அவ்வாறான கவனம் ஒன்று சுங்கத்தினால் செலுத்தப்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை. | இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன். | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(ஊ)** | **இலங்கை சுங்கத்தினால் கொள்கலன் பிரிவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அத்தியவசிய பண்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனை**<br>சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அத்தியவசிய பண்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2021 ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2022 ஆகஸ்ட் 01 திகதி அளவில் சுங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | தேவையான அங்கீகாரத்தை (பரிந்துரை) வழங்கும் நிறுவனத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| | உணவுப் பண்டங்கள் அடங்கிய 27 கொள்கலன்கள் தொடர்பாக இறக்குமதியாளர்களினால் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அந்தக் கொள்கலன்கள் அவர்களுக்கு விடுவித்தல் 95 நாட்கள் முதல் 563 நாட்கள் வரை தாமதம் அடைந்துள்ள சந்தர்ப்பம் காணப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுக்காக அங்கீகாரங்கள் (பரிந்துரைகள்) வழங்க வேண்டிய நிறுவனங்களான விவசாயத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து அவ்வாறான சான்றிதழ்கள் கிடைப்பதில் தாமதம் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | | ஒருங்கிணைப்பு அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | சுங்க விசாரணை அலுவல்கள் காரணமாக அதன் கீழ் காணப்படும் ரேன்கின் கென்டேனர் டேமினல் (RCT) முற்றத்தில் 2022 ஆகஸ்ட் 01 திகதியில் உள்ளவாறு உணவுப் பொருட்கள் அடங்கிய 88 கொள்கலன்கள் 60 நாட்கள் முதல் 778 நாட்கள் வரையான காலம் தடுதது வைக்கப்பட்டிருந்து. அவற்றின் பெறுமதி ரூபா 745,383,250 ஆக இருந்தது. | குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கொள்கலன்கள் தொடர்பான சுங்க விசாரணைகள் நடாத்தி விரைவாக பூர்த்தி செய்யும் படி அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. | கொள்கலன்கள் தொடர்பான சுங்க விசாரணைகள் விரைவாக நடாத்தி முடிக்க வேண்டும். |
| (iii) | இலங்கைக்கு மஞ்சள் இறக்குமதி செய்யும் போது இணைந்த வகைப்படுத்தல் குறியீடு 0910.30.10 இற்குரிய தூள் செய்யப்படாத மற்றும் அறைக்கப்படாத மஞ்சள்களுக்காக அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ள வேண்டும் என 2019 திசெம்பர் 06 திகதி 2152/63 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ‘‘எதிர்புகள் ஏதும் இல்லை’’ என (No objection letter) கடிதமொன்றும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் | மத்திய விசாரணைப் பிரிவிற்குரிய RCT இல் தற்போது பறிமுதல் செய்யப்பட்ட ரூபா 185,137,064 தொகை பெறுமதியான 752,739 கிலோகிராம் மஞ்சள் அடங்கிய 42 கொள்கலன்கள் காணப்பட்டதுடன், அவற்றின் 15 கொள்கலன்கள் விடுவிப்பதற்காக மத்திய விடுவித்தல் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கொள்கலன்களை விடுவிப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு 2020 மே 10 திகதிக்கு பின்னர் மஞ்சள் தொகையினை விடுவிப்பதற்காக தேவைப்படும் ‘‘எதிர்ப்பு ஏதும் இல்லை’’ (No objection letter) என்ற கடிதம் வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது. மேற்கூறிய தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் 2020 மே 10 திகதி ரூபா 151,979,588 தொகை பெறுமதியான மஞ்சள் 624,877 கிலோகிராம் இலங்கைக்கு இறக்குமதி செய்திருந்ததுடன், 2022 ஆகஸ்ட் 01 திகதி அளவிலும் சுங்கத்தினால் 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தேவையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(எ) Temporary Importation for Export Processing Scheme (TIEP) திட்டத்தின் கீழ் தேங்காய் எண்ணெய் (Coconut oil) இறக்குமதி செய்து பெறுமதி கூட்டி மீள் ஏற்றுமதிக்காக சுங்கத்தில் பதிவு செய்திருந்த கம்பனியொன்றினால் அவ்வாறு தேங்காய் எண்ணெய்யை மீள்ஏற்றுமதி செய்யாமல் பல வருட காலமாக உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்து அரசுக்கு வரி வருமானத்தை இழக்கச் செய்திருந்தது. இது தொடர்பாக சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் படி 2014 முதல் 2017 வரையான காலப் பகுதியில் மேற் கூறிய தனியார் கம்பனியினால் விற்பனை செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்யின் 463.065kg ஆகக் காணப்பட்டதுடன், சுங்க விசாரணை மூலம் விதிக்கப்பட்டிருந்த தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 477,377,802 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | TIEP திட்டத்தின் கீழ் வசதிகள் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் தொடர்பாக சுங்க உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு வருடமும் முறையான மேற்பார்வை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்காமையால் இவ்வாறான மேலும் மோசடியான கம்பனியினால் மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது என கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது. | பதவியணியின் எண்ணிக்கையின் படி ஒரு வருடத்துக்கு ஒரு முறை வெளிக்களம் சார் அவதானிப்புக்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | (TIEP) திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த கம்பனிகள் தொடர்பாக வெளிக்களம் சார் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | தனியார் கம்பனி ஒன்றிற்கு விதிக்கப்பட்டிருந்த ரூபா 477,377,802 இற்கான தண்டப் பணத்தின் பெறுமதி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 163 இற்கு இணங்க ரூபா 90,000,000 வரை தணித்தல் மேற்கொள்வதற்கு (Mitigate) சுங்கத்தினால் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அங்கு சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 166(ஆ) இற்கு இணங்க தண்டப் பணத்திற்கு அல்லது பறிமுதல் செய்வதற்கு காரணமாகியிருந்த மீறியதன் பாரதூரத் தன்மை, இழந்த வருமானத்தின் எண்ணிக்கை ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் TIEP திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அரசுக்கு இக் கம்பனிகளினால் இழக்கச் செய்த மொத்த நட்டம் ரூபா 63,567,715 தொகையாக காணப்பட்டதுடன், இழக்கப்பட்ட பெறுமதி ரூபா 90,000,000 தொகை வரை குறைக்கப்பட்ட காரணத்தினால் திறைசேரியினால் உண்மையாக இழந்த வருமானம் ரூபா 27,000,000 தொகை (ரூபா 90,000,000 x 30%) வரை குறைந்திருந்தது. | அந்த தனியார் கம்பனிக்கு விதிக்கப்பட்டிருந்த ரூபா 477,377,802 இற்கான இழத்தல் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 163 இற்கு இணங்க ரூபா 90,000,000 தொகை குறைப்பதற்கு (MITIGATE) சுங்க விசாரணை உத்தியோகத்தர் செயற்பட்டிருந்தார். | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஏ) | கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கியிருந்த உதவி ஒன்றின் மீது இலங்கை அரசின் திறைசேரியினால் அந்த செயற்திட்டத்திற்கு தேவையான DI | இந்த கணக்காய்வு ஐய வினா தயாரிக்கும் சந்தர்ப்பம் வரை பண்டகசாலைபடுத்தல் (TO-BOND) குறிப்புப் பதிவுகளில் பெறுமதியை விட கூடுதலாக பெறுமதி ஒன்றுடன் | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 86 இன் படி பண்டங்களை பண்டகசாலையில் இருந்து விடுவிக்கும் போது முன்னர் |

குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் இறக்குமதி செய்யும் கருமத்திற்காக தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக சபை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்த வேலை வழங்கியிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 72 இற்கு இணங்க முதலாம் சந்தர்ப்பத்தில் வரி செலுத்தாமல் பண்டங்களை பண்டகசாலையில் இடுவதற்காக சுங்கத்தினால் அத் தனியார் நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் அளித்திருந்திருந்ததுடன், அதற்காக குறிப்புப் பதிவுகளில் (Cusdec) 08 வழங்கி அ.டொ.5,139,621 தொகைக்கான பண்டங்கள் பண்டகசாயையில் (To Bond) இடப்பட்டிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 86 ஆவது பிரிவின் படி பண்டங்களை பண்டகசாலையில் இருந்து விடுவிக்கும் போது முன்னர் வெளியிடப்பட்ட பண்ட இருப்பின் இன்வொயிஸ் பெறுமதியே வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும், உள்நாட்டிலே தயாரிக்கப்பட்ட இன்வொயிஸ்களை பயன்படுத்தி குறிப்பிட்ட பெறுமதியின் மூலம் அ.டொ. 6,350,364 என போலி தகவல்களுடன் இறக்குமதி குறிப்புப் பதிவுகள் சமர்ப்பித்து அதன் மூலம் அ.டொ. 1,210,743 இற்கான பெறுமதி ஒன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மிகையாக பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. போலியான இன்வொயிஸ்கள் தயாரித்தல் மற்றும் போலியான தகவல்கள் சமர்ப்பித்தல் ஆகியவையாக குறிப்பிட்ட நிறுவனம் மேற்கொண்டிருந்த குற்றங்கள் தொடர்பாக மிகையாக செலவிடப்பட்டிருந்த தொகையை மீண்டும் அறவீடு செய்வதற்கான இயலுமை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கும் படி 2021 ஏப்ரல் 06 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்திற்கு கட்டளை இடப்பட்டிருந்த போதிலும்

பண்டகசாலையில் இருந்து அகற்றுதல் (EX-BOND) குறிப்பு பதிவுகள் பெற்றுக் கொள்ளல் வழமையாக நடைபெற்று வருகின்றது. மேற்கூறிய பெறுமதிகள் இன்வொயிஸ்கள் தயாரித்தல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான வியாபார நடைமுறை ஒன்றாகும். (TRADE NORM) தற்போது சட்டமா அதிபதின் தீர்மானத்தின் படி பண்டகசாலையிடப்படும் (TO-BOND) பெறுமதி பண்டகசாலையில் இருந்து அகற்றும் போது (EX-BOND) பயன்படுத்தப்படுகின்றது.

வெளியிடப்பட்ட பண்ட இருப்பின் இன்வொயிஸ் பெறுமதியே வெளியிடப்பட வேண்டும்.

| | |
|---|---|
| கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 30 அளவிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு மற்றும் செயலாற்றலுக்கு தேவையான சட்ட உத்தியோகத்தர் ஒருவர், 02 தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் புள்ளிவிபர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டது. | சுங்கத் திணைக்களத்தின் உத்தியோகத்தரினால் சட்ட பிரிவின் அலுவல்கள் நிறைவேற்றப்படுவதனால் சட்டப் பணிப்பாளர் பதவி ஒன்று தேவைப்படாது எனவும் வழமையான கடமைகள் மேற்கொள்ளும் போது தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்காக சட்ட உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கும் படி கோரி கடிதம் ஒன்று வரைவு செய்யப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு மற்றும் செயலாற்றலுக்கு தேவையான மனித வளம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |